**திறன்கள் துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் - 2014**

---

திறன்கள் துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்தி சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2014 செப்தம்பர் 12 ஆம் திகதிய எல்கே 5516 மற்றும் எல்கே 5517 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் II.பீ.3 ஆம் பிரிவின் 2 ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் யாப்பின் 154 (1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 செயற்திட்ட அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியிடல் மற்றும் செயற்திட்டக் காலம்

நிகழ்ச்சித்திட்ட அமுலாக்கல் ஆவணத்தின் பிரகாரம், முன்னாள் இளைஞர் விவகார மற்றும் திறன் விருத்தி அமைச்சும் தற்போதைய திறன் அபிவிருத்தி, தொழிற்கல்விப் பயிற்சி அமைச்சு நிகழ்ச்சித்திட்டத்தின் நிறைவேற்று முகவராக உள்ளதுடன், முன்னாள் இளைஞர் விவகார மற்றும் திறன் விருத்தி அமைச்சும் தற்போதைய திறன் அபிவிருத்தி, தொழிற்கல்விப் பயிற்சி அமைச்சின் கீழுள்ள ஏனைய 09 நிறுவகங்கள் நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கல் முகவர்களாக உள்ளன. நிகழ்ச்சித்திட்ட அமுலாக்கல் ஆவணத்தின் பிரகாரம், 2020 ஆம் ஆண்டில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழிற்சந்தை தேவையை பூர்த்தி செய்ய திறமையான கல்வி முறைமையை கட்டியெழுப்புதல் மற்றும் தரம், தொடர்பு, அணுகல், தொழிற்கல்வி பயிற்சிக்கான அங்கீகாரம் மற்றும் ஆதரவான கொள்கைகள், முறைமைகள் மற்றும் கட்டமைப்புகள் ஆகியவற்றை மேம்படுத்தலே செயற்திட்டத்தின் நோக்கங்களாகும். செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 125,916 மில்லியனுக்கு சமனான ஐ.அ.டொலர் 961 மில்லியனானதுடன் சர்வதேச அபிவிருத்தி சங்கத்தினால் ரூபா 13,100 மில்லியனிற்கு சமனான ஐ.அ.டொலர் 100 மில்லியன் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டிருந்தது. மேலும், ரூபா 18,523 மில்லியனுக்கு சமனான ஐ.அ.டொலர் 141 மில்லியன் தொகை ஆசிய அபிவிருத்தி வங்கி, ஜேர்மனி அரசு மற்றும் கொரியாவின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதிக்கான வங்கி ஆகியவற்றால் நிதியளிக்க எதிர்பார்க்கப்படுகின்றது. இவ் அறிக்கையானது முன்னாள் இளைஞர் விவகார மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சும், தற்போதைய திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற்கல்வி பயிற்சி அமைச்சு மற்றும் ஏனைய 09 அமுலாக்கல் முகவர்களால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் மீதான கருத்துரைகளை உள்ளடக்கியுள்ளது. நிகழ்ச்சித்திட்ட நடவடிக்கைகள் 2014 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2020 ஆம் ஆண்டளவில் பூர்த்தியாக்கப்பட பட்டியலிடப்பட்டிருந்தது.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிகழ்சித்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிகழ்சித்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். அந்தப் பரிசோதனையில் பின்வருவனவற்றை மதிப்பீடு செய்வதற்கு அவசியமானதென தென்பட்ட செவ்வைகளும் உள்ளடக்கப்பட்டிருந்தன.

(அ) செயற்திட்ட முகாமைத்துவம் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும், செயற்திட்ட தொழிற்பாடுகள் தொடர்பான, ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக கணக்கிணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கத்தினதும் நன்கொடையளிக்கும் முகவர்களிதும் நிதிகளிலிருந்தான வரிசை அமைச்சு மற்றும் ஏனைய 09 அமுலாக்கல் முகவர்களினதும் செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணுதல் என்பவற்றை

தொடர்ச்சியான அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளிற்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள் தொழிற்கல்வி பயிற்சி துறையின் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டனவா என்பதும்,

(ஊ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையில் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 அபிப்பிராயம்

இது வரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து,

(அ) செயற்திட்டமானது 2014 திசெம்பர் 31 ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக் கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு இணங்க 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டினுள் ரூபா 2.5 மில்லியன் கிரயத்தில் திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சிற்காக கொள்வனவு செய்யப்பட்ட கணணி

மற்றும் உபகரணங்களை பதிவு செய்வதில் ஏற்பட்ட வழு காரணமாக வாகனங்களின் கீழ் வகைப்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) ரூபா 24.65 மில்லியன் கிரயத்தில் திறன்கள் துறை அபிவிருத்திப் பிரிவிற்காக கொள்வனவு செய்யப்பட்ட உபகரணங்கள் மற்றும் மேற்கொள்ளப்பட்ட கட்டிட புனரமைப்பு பணிகள் உரிய அமைச்சின் செலவினமொன்றாக கருதப்படுவதற்குப் பதிலாக செயற்திட்டத்தின் செலவினமொன்றாக சாட்டுதல் செய்யப்பட்டிருந்தது.

(இ) ரூபா 53.03 மில்லியன் சம்பளங்கள் மற்றும் ஏனைய செயற்பாட்டுக் கிரயங்கள் மற்றும் ரூபா 4.6 மில்லியன் தொகையான விளம்பரச் செலவினங்கள் ஊழியப் பயிற்சிக் கிரயமாக காண்பிக்கப்பட்டிருந்தது.

### 2.2.2 இணக்கம் செய்யப்படாத மீதிகள்

09 அமுலாக்கல் முகவர்களில் 06 அமுலாக்கல் முகவர்களின் தனிப்பட்ட நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட பல்வேறு மூலதன மற்றும் மீண்டெழும் செலவின விடயங்களுக்கும் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட தொகைகளுக்கமிடையே பொருண்மையான வேறுபாடுகள் அவதானிக்கப்பட்ட போதிலும், அவ் வேறுபாடுகள் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களுடன் கணக்கிணக்கம் செய்து சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| **நிறுவனம்** | **மீளாய்வாண்டின் செலவினம்** | |
|---|---|---|
| | **தனிப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா மில்லியன்** | **ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா மில்லியன்** |
| தொழிற்பயிற்சி அதிகாரசபை | 1,830.61 | 1,668.11 |
| தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை | 1,061.37 | 994.75 |
| தொழிற்பயிற்சி தொழில்நுட்ப பல்கலைக்கழகம் | 248.02 | 313.11 |
| இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவகம் | 299.03 | 347.57 |
| தேசிய கடற்றொழில் மற்றும் கடலோட்டு எந்திரவியல் நிறுவகம் | 172.06 | 191.22 |
| மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு | 99.81 | 94.25 |

## 3. நிதி மற்றும் பொதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நன்கொடை முகவர்களுடன் இணங்கியதன் பிரகாரம், சில பணவளிப்பு இணைப்பு குறிகாட்டிகளை எய்துவதற்காக மீளாய்வாண்டில் ரூபா 2,585 மில்லியன் தொகை நிகழ்ச்சி திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. எவ்வாறெனினும், ரூபா 1,648 மில்லியன் மாத்திரம் மீளாய்வாண்டினுள் பயன்படுத்தப்பட்டிருந்தது.
சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், பாதீட்டு உதவியாக பொது திறைசேரிக்கு பணவளிப்பு செய்வதற்காக அட்டவணையிடப்பட்ட நிதிகளின் விபரங்கள் மற்றும் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான உண்மையாக பயன்படுத்திய தொகைகள் என்பன கீழ்வருமாறு காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை கடன் உடன்படிக்கையின் பிரகாரம் | | 2014 திசெம்பர் 31 வரை | | 2014 திசெம்பர் 31 வரை விடுவிக்கப்பட்ட நிதிகள் | |
|---|---|---|---|---|---|---|
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன |
| ஏடீபீ | 100.0 | 13,100 | 40.0 | 5,240 | 20.04 | 2,613 |
| ஐடீபீ | 100.0 | 13,100 | 9.6 | 1,205 | - | - |
| ஜேர்மனி அரசு | 15.4 | 2,017 | - | - | - | - |
| கொரியாவின் ஏற்றுமதி இறக்குமதிக்கான வங்கி | 26.0 | 3,406 | - | - | - | - |
| இலங்கை அரசாங்கம் | 719.8 | 94,293 | - | - | - | 7,308 |
| | **961.2** | **125,916** | **49.6** | **6,445** | **20.04** | **9,921** |

நிகழ்சித்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தின் 41 ஆம் பந்தியின் பிரகாரம், சர்வதேச அபிவிருத்தி சங்கத்திடமிருந்து ஐ.அ.டொலர் 9.6 மில்லியனை பெற்றுக்கொள்வதற்கு பட்டியலிடப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், சர்வதேச அபிவிருத்திக்கான சங்கத்திளால் மீளாய்வாண்டினுள் நிதி விடுவிக்கப்பட்டிருக்கவில்லை. கடன் வழங்கும் முகவருடனான உடன்படிக்கையானது 2014 செப்தெம்பர் 12 ஆந் திகதியே கைச்சாத்திடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 3.2 பௌதீக முன்னேற்றம்

நிகழ்ச்சித்திட்டத்தின் செயல்நடவடிக்கைத்திட்டத்தின் பிரகாரம், அமுலாக்கல் முகவர்களால் மீளாய்வாண்டினுள் 59 உப நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்துவதற்கு அட்டவணைப்படுத்தப்பட்டிருந்ததுடன், அதற்காக ரூபா 3,457.52 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், மீளாய்வாண்டினுள் 44 உப நிகழ்ச்சித்திட்டங்கள் மாத்திரம் அமுல்படுத்தப்பட்டிருந்ததுடன், அதற்காக ரூபா 1,657.53 தொகை செலவிடப்பட்டிருந்தது.

மேலும், மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்ட 11 உப நிகழ்ச்சித்திட்டங்களில் 05 உப நிகழ்சித்திட்டங்கள் மாத்திரம் அமுல்படுத்தப்பட்டிருந்தது. தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபையால் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்ட 08 உப நிகழ்சித்திட்டங்களில் 05 நிகழ்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டிருந்தன.

## 3.3 நிதிக் கட்டுப்பாட்டிலான பிரச்சினைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தின் 24 ஆம் பந்தியின் பிரகாரம், செயற்திட்டத்தின் கீழ் அனைத்து நிறுவனங்களின் உள்ளகக் கணக்காய்வு பிரிவுகளும் அபாயத்தினை அடிப்படையாக கொண்ட உயர் தாக்கமுடைய கணக்காய்வினை மேற்கொள்ளுமாறு வேண்டப்பட்டுள்ளதுடன், செயற்திட்டத்தின் திறன்கள் துறை அபிவிருத்தி பிரிவானது கண்காணிப்பு நோக்கங்களுக்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு வேண்டப்பட்டுள்ளது. உரிய அமைச்சினால் ஏனைய அமுலாக்கல் முகவர்களாலும் உள்ளக கணக்காய்வு பிரிவுகள் தாபிக்கப்பட்டு அதில் 55 கணக்காய்வாளர்கள் இணைப்பு செய்யப்பட்டிருந்த போதிலும், 05 அமுலாக்கல் முகவர் நிலையங்களின் கீழ் அமுலாக்கப்பட்ட நடவடிக்கைகளின் மீது உள்ளக கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும், ஏனைய முகவர்களால் முன்வைக்கப்பட்ட உள்ளக கணக்காய்வு அறிக்கையில் பொருண்மையான கண்டுபிடிப்புகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிகழ்ச்சி திட்டத்தின் அமுலாக்கல் முகவர்களின் உத்தியோத்தர்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட ஊக்குவிப்புப்படி திட்டமானது உரிய அமைச்சினால் அபிவிருத்தி செய்யப்பட்ட எதிர்பார்க்கப்பட்ட விளைவுகள் மற்றும் பிரமாணங்களை அடிப்படையாகக் கொண்டு அமுலாக்கப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட மொத்த ஊக்குவிப்புப்படி கொடுப்பனவு ரூபா 97.09 மில்லியன் ஆகும்.